**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) / மேல்நிலை முதலாம் ஆண்டு(+1) / பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு**

**ஜூன் / ஜூலை 2024**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**

**மறுகூட்டல்-II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூன்/ஜூலை 2024 மேல்நிலை இரண்டாமாண்டு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை பின்வரும் நாட்களில் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

| வகுப்பு | விடைத்தாள் நகலினை பதிவிறக்கம் செய்யும் நாள் | இணையதள முகவரி மற்றும் விடைத்தாள் நகலினை பதிவிறக்கம் செய்யும் வழிமுறைகள் |
|---|---|---|
| 12-ஆம் வகுப்பு (+2)<br>11-ஆம் வகுப்பு (+1)<br>10-ஆம் வகுப்பு (SSLC) | 09.08.2024 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.00 மணி முதல் | www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்குள் சென்று "Notification" என்ற வாசகத்தை " Click " செய்தால் தோன்றும் பக்கத்தில்<br>➢ **HSE Second Year/ HSE First Year/ SSLC Supplementary Exam, June/July 2024 - Scan copy Download,**<br>என்ற வாசகத்தினை " Click " செய்து தேர்வர்கள் தங்களது தேர்வெண் (Roll No.) மற்றும் பிறந்த தேதி (Date of Birth) ஆகிய விவரங்களை பதிவு செய்து, தங்களது விடைத்தாளின் நகலினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. |

**மறுகூட்டல் –II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் முறை:**

ஜூன் / ஜூலை 2024, மேல்நிலை இரண்டாமாண்டு, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுக்கான மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்களுக்கான வழிமுறைகள்.

| வகுப்பு | விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள் | கட்டணம் | வழிமுறைகள் |
|---|---|---|---|
| 12–ஆம் வகுப்பு (+2)<br>11–ஆம் வகுப்பு (+1) | 12.08.2024 முதல் 13.08.2024 | 1. மறுமதிப்பீடு பாடம் ஒன்றிற்கு– ரூ.505/–<br>2. மறுகூட்டல்<br>• உயிரியல் பாடம் ரூ.305/–<br>• ஏனைய பாடங்களுக்கு ரூ.205/– | குறிப்பிட்டுள்ள நாட்களில் காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும், தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திற்கும் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். |
| 10–ஆம் வகுப்பு (SSLC) | | 1. மறுமதிப்பீடு பாடம் ஒன்றிற்கு– ரூ.505/–<br>2. மறுகூட்டல் பாடம் ஒன்றிற்கு – ரூ.205/– | |

ஒம்/–
**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

**இடம் :** சென்னை– 600 006.
**நாள் :** 08.08.2024.